IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 1262/2025 Date : 25.05.2026 P.W.3/ LW. 8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தர்ராஜன் | ஆதார்எண் | |
| தந்தை பெயர் | தண்டபாணி | தொழில் | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | எலவனாசூர்கோட்டை | வயது | 57 |
| 2 முதல் 4 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் தற்போது எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் **திரு.சடையப்பிள்ளை** என்பவருடன் நான் பணிபுரிந்த வகையில் அவரது கையெழுத்தும் கையொப்பம் எனக்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் **திரு.சடையப்பிள்ளை** அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது 27.02.2018 ம் தேதி நிலையம் ஆஜராகி கண்ணன் த/பெ சின்னதம்பி படையாட்சி என்பவர் கொடுத்த புகாரை பெற்று **சி.எஸ்.ஆர்.87/2018** வழங்கினார். புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 55**/2018** இ.த.ச.பிரிவுகள் 147, 148, **294(பி), 323, 324, 355, 506(2)** முதல் தகவல்அறிக்கை தயார் செய்தார். அவர் தயார் செய்த முதல் தகவல்அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். பின்னர் அவர் சம்பவம் இடம் சென்று **சாட்சிகள் பிரகாஷ், செந்தில்** ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார். அவர் தயார் செய்த பார்வை மகசர் **அ.சா.ஆ.4** ஆகும். மாதிரிவரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதை கண்டு எதிரிகளை தேடி சென்றதில் மேலபாளையம் மாரியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்த எதிரிகள் கலியபெருமாள், சங்கர் ஆகியோரை 27.02.2018 ம் தேதி 13.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனை செய்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் சம்பவ சாட்சிகளான **கண்ணன், சந்திரா** ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்தும், பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் காயம்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தீபதர்ஷினி அவரை சந்தித்து விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்று பெற்றார். மருத்துவர் அளித்த காயச்சான்று **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் மனு ரசீது வழங்கிய இளந்திரையன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் . பின் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என கண்டு 147, 148, **294(பி), 323, 324, 355, 506(2)** இ.த.ச.ன்படி எதிரியின்

மீது புலன்விசாரணை மேற்கொண்டு இறுதிஅறிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். மனு ரசீது எண். 87/2018 நீதிமன்றத்திற்கு அனுப்பபடவில்லை என்று சொன்னால் ஆவணங்களின் அடிப்படையில் சரிதான். மேற்சொன்ன சி,எஸ்.ஆர் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னாலும், நீதிமன்றத்திற்கு அனுப்பபடவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

2. இவ்வழக்கின் விசாரணை அதிகாரி அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும், சம்பவ இடம் செல்லாமலும் வரைபடம் மற்றும் மகசர் சாட்சிகளை காவல்நிலையத்திலேயே விசாரணை செய்து எதிரிகள் மீது பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Typed by Typist – E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.25 19:19:14 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.